Cambridge Assessment International Education

# Cambridge International AS Level

**TAMIL LANGUAGE** **8689/22**

Paper 2 Reading and Writing **October/November 2021**

INSERT **1 hour 45 minutes**

*6689248825-I*

**INFORMATION**
- This insert contains the reading passages.
- You may annotate this insert and use the blank spaces for planning. **Do not write your answers** on the insert.

**தகவல்**
- இந்த இணைப்பில் படிக்கும் பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன.
- இந்த இணைப்புப் பகுதியில் விடைக்கான குறிப்புகளை. வெற்றிடத்தில் குறித்துக்கொண்டு திட்டமிடலாம். ஆனால் கேள்விக்கான **விடைகளை இங்கே எழுதக்கூடாது**.



DC (CJ) 222276
© UCLES 2021

பகுதி 1

கட்டுரை **ஒன்றைப்** படித்துவிட்டு **1, 2, 3 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 1**

## இல்லம்சார் புத்தக வாசிப்பு

அரவிந்தன் சிறுவனாக இருக்கும்போது அவனது தாய் அமிர்தா அவனுக்கு கதைப் புத்தகங்களை வாசித்து அவனுக்குப் புத்தகத்தில் நன்றாக ஆர்வத்தை உண்டாக்கியிருந்தாள். ஒரு நாள் அரவிந்தன் புத்தகமொன்றை வாசிக்கும்படி அவளிடம் ஆர்வத்தோடு கொடுத்தான். புத்தகத்தைத் திறந்தபோதுதான் அப் புத்தகம் வாசிப்பதற்கான ஒன்றல்ல, ஏராளமான மிருகங்களின் படங்களுடன் கூடிய ஒரு நிறம் தீட்டும் புத்தகம் என்பதை அமிர்தா உணர்ந்து கொண்டாள். எனினும், மகனின் வேண்டுகோளை மறுக்க அவளுக்கு விருப்பமில்லை. அவனை அருகில் இருத்தி, முதல் பக்கத்தைத் திறந்து படத்துக்கேற்ப ஒரு கதையைக் கூறத் தொடங்கினாள். தலைப்பை முதலில் கூறினாள். தொடர்ந்து ஒவ்வொரு பக்கமாகத் திருப்பிய வண்ணமாக அந் நிறம் தீட்டும் புத்தகத்திலிருந்த படங்களுக்கேற்ப கதையைத் தொடர்ந்தாள்.

கதையின் நடுவில் அமிர்தா மிருகங்கள் கர்ச்சிப்பது போல் பாவனை செய்தும், துக்கத்தை வெளிப்படுத்த அழுவது போல் பாசாங்கு செய்தும், பெரிதாகச் சிரித்தும் தான் கூறிய கதைக்கு உயிரூட்டினாள். அவளது குரல் ஏற்ற இறக்கங்களோடு கூடியதாகக் கதைக்கு மேலும் அழகைக் கொடுத்தது. அவளது விரல்கள் புத்தகத்திலிருந்த ஒவ்வொரு மிருகத்தையும் சுட்டிக்காட்டிய வண்ணமாக கதைப் போக்கோடு மெல்ல நகர்ந்தது. அரவிந்தனது கண்கள் அவளது விரல்களின் போக்கில் பின்தொடர்ந்து சென்றன. இறுதியில் கதை கூறி முடிந்ததும் இருவரும் ஏதும் பேசாது அமைதியாகி, அந்த அறையில் முழு நிசப்தம் நிலவியது. அரவிந்தனது கண்கள் அகலத் திறந்து ஆச்சரியத்தை வெளிப்படுத்தின. "நான் இந்த கதையை இதற்கு முன் கேட்டதில்லை. இது நல்ல கதை" என்று அரவிந்தன் மென்மையான குரலில் மகிழ்ச்சியுடன் கூறினான்.

அரவிந்தனுக்கு இப்போது பதினொரு வயதாகின்றது. அவனது வாசிப்புப் பழக்கம் இன்னும் கூடுதலாக அதிகரித்து, அதன் பிரதிபலன் அவனது பாடசாலைத் தேர்வுகளிலும் தெரிந்தது. அவன் சிறந்த மாணவனாகப் பள்ளியில் திகழ்வதற்கும் உதவியது. அரவிந்தனது ஆசிரியர் மற்றைய மாணவர்களுக்கு அரவிந்தனை உதாரணமான மாணவனாகக் காட்டுவார். அவன் விளையாட்டிலும் படிப்பிலும் பாடசாலையில் முன்னணியில் திகழ்ந்தான். அமிர்தா ஏராளமான கதைப் புத்தகங்களை வாங்கிக் கொடுப்பதோடு, அவனை ஏராளமாகக் கதைகளும் கட்டுரைகளும் எழுதவும் ஊக்குவித்தாள். அத்துடன், சமையலறை, படுக்கையறை, தொலைக்காட்சிக்கு அருகில் என்று இல்லத்தில் அனைத்து இடங்களிலும் புத்தகங்களை வாசிப்பதற்காக எப்போதும் வைத்திருப்பாள். இரண்டு தேசிய ரீதியான கதைப் போட்டிகளில் அரவிந்தன் வெல்வதற்கு அவனது வாசிப்புப் பழக்கமே முக்கிய காரணமாக இருந்தது. அத்துடன், அவனது வாசிப்புப் பழக்கம் அவனை எப்போதும் சிறுவயதிலிருந்தே எந்தச் சவாலான சந்தர்ப்பங்களிலும் சாந்தமான மனநிலையில் இருப்பதற்கும் உதவியது. அரவிந்தனது மாமியும் அரவிந்தன் போன்று இலக்கியப் போட்டிகளில் பல பரிசுகளை வென்று புகழ்பெற்றவர் என்பதும், அவர் அரவிந்தனுக்கு முன்மாதிரியாக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பகுதி **2**

இப்பொழுது இரண்டாம் கட்டுரையைப் படித்துவிட்டு **4, 5 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

கட்டுரை **2**

**பள்ளிக்கூடங்களில் புத்தக வாசிப்பு**

பிள்ளைகள் மத்தியில் புத்தக வாசிப்பை ஊக்குவிப்பதில் பாடசாலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. புத்தக வாசிப்பு தியானத்துக்கு இணையானது. புத்தக வாசிப்பின்போது மனம் அலைபாயாமல் இருக்கும். பலவகையான புத்தகங்கள் வாசிப்பதால் கற்பனைத் திறன் வளரும். இள வயதிலிருந்தே புத்தக வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திவிட்டால் மூளை வளர்ச்சி பெறும். இத்தகைய காரணங்களினால் ஒருவருக்கு தன்னம்பிக்கையும் வளரும். புகழ்பெற்ற பாடசாலை ஒன்றில் ஆசிரியராகத் தொழில் புரியும் விமலா கருத்துத் தெரிவிக்கும்போது, “பல பிள்ளைகள் பாடப் புத்தகங்களை மட்டும் படித்து பணம் சம்பாதிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொள்ளத் தொடங்குகின்றார்கள். இவ் இளம் தலைமுறையினர் வாழ்க்கையை இரசிக்கத் தெரியாதவர்களாக, மற்றவர்களின் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தெரியாதவர்களாக நடைமுறை அறிவு குறைந்தவர்களாக உருமாறுகின்றனர்” என்று கூறினார்.

சிறுவர்களுக்கு வாசிப்பில் ஊக்கத்தைக் கொடுத்தல் என்பது எந்தவொரு பாடசாலையினதும் முக்கிய கடமையாகும். பாடசாலையொன்றின் தலைமை ஆசிரியரைப் பேட்டி காணும்போது அவர் கூறிய ஒரு விடயத்தை இங்கு குறிப்பிடுதல் சாலச் சிறந்ததாகும். அவரது மாணவர்களுள் ஒருவனான மோகனுக்கு எட்டு வயதாக இருக்கும்போதே மிகச் சிறப்பாகக் கடினமான சொற்களை எழுத்துக்கூட்டி வாசிப்பதற்கும், நூலை உணர்வுபூர்வமாக வாசிப்பதற்கும் முடியும். எந்த கடினமான புத்தகத்தை வாசித்த பின்பும், வாசித்தது தொடர்பான அவனது ஞாபக சக்தியும், கிரகித்தல் திறனும் அவனது வயதொத்தவர்களுள் உயர்வானதாக இருந்தது. இவற்றால், எந்த எழுத்துப் பிழையில்லாமல் எழுதும் ஆற்றல் அவனுள் மேலோங்கியது. மோகன் பிற்காலத்தில் படிப்பில் முன்னணி வகிப்பதற்கும் இதுவே காரணமாக இருந்தது. ஏராளமான நூல்களை வாசிக்கும் பாடசாலைப் பிள்ளைகளது வகுப்பறை கவனிப்புத் திறன் அதிகமாகக் காணப்படும். அத்துடன், வகுப்பில் நடந்த பாடங்களை நீண்ட கால நினைவாற்றலுடன் வைத்திருப்பதற்கும் இது உதவும்.

சில மாணவர்கள் நன்றாக வாசிக்கக் கூடியவர்களாகக் காணப்பட்டாலும், தமக்குள் தம்மைப் பற்றிய தன்னம்பிக்கை குறைந்தவர்களாகக் காணப்படுவார்கள். இத்தகைய மாணவர்களுக்கு பாடசாலைகளின் உதவி அவசியமாகும். வாசிப்புப் போட்டி ஒன்றிற்கு புகழ்பெற்ற பாடசாலையொன்றால் அவர்களது மாணவர்களுள் ஒருவரான அன்பரசியை அனுப்ப முயற்சித்தபோது, அவள் தன்னால் போட்டியில் பங்குபெறும் அளவுக்கு திறமை இல்லை என்று கூறி பயந்தாள். அவளுக்கே அவளது திறமை என்ன என்பது தெரியாமலும் அதன் மீது நம்பிக்கை இல்லாமலும் இருந்தது. ஆசிரியர்கள் எல்லோருமாகச் சேர்ந்து அவளுக்கு நம்பிக்கை கொடுப்பதற்காக வகுப்பறையில் தினமும் நண்பர்கள் முன் வாசிப்பதற்கு ஊக்குவித்தார்கள். மூச்சுப் பயிற்சி செய்வதற்கு பயிற்றுவித்தும், முன்னிருப்பவர்களோடு விழி சார் தொடர்புகளை ஏற்படுத்துவதற்குமான பயிற்சிகளையும் கொடுத்தனர். விருது பெற்ற பின்னர்தான் அவளுக்குத் தன்மேல் முழுமையான சுய நம்பிக்கை தோன்றியது.

ஏராளமான கதைப் புத்தகங்களைப் படிக்கும் விமலனிடம் வாசிப்புப் பற்றி கேட்டபோது, “நான் பயணம் செய்யும்போதும் புத்தகம் வாசிப்பதைத்தான் விரும்புவேன். சிறுவயதிலிருந்தே எனது பெற்றோர் தினமும் இல்லத்தில் வாசிப்பு நேரம் என்று முப்பது நிமிடங்களை ஒதுக்குவார்கள். அந்த நேரத்தில் வீட்டிலுள்ள அனைவரும் புத்தகங்களோடு அமர வேண்டும். எனது தாயார் அனைவரும் வாசிப்பதை உறுதிப்படுத்த அந்த முப்பது நிமிட இறுதியில் கேள்விகளைக் கேட்டு சிறு பரிசுகளை எமக்குக் கொடுப்பார். இதுவே, பின்னர் எனது வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கான முக்கிய காரணமாக இருந்தது. ஒவ்வொரு நூலுக்குள்ளும் நான் அந்தந்த பாத்திரங்களாக உருமாறி பல்வேறு வேடங்களை ஏற்பதாக உணர்வதன் மூலமாக எனது ஆக்கத்திறனை வளர்க்கக் கூடியதாக இருந்தது. வெளியிலிருந்து வரும் தாக்கங்கள் எதுவுமின்றி என்னையே மறந்திருக்கின்ற அமைதியான நிலையைப் புத்தகங்கள் எனக்குத் தரும். ‘கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு’ என்று ஆன்றோர்கள் கூறுவர். அதுபோல், நான் சென்றவிடமெல்லாம் பாராட்டுகளைப் பெற இது உதவியது” என்று கூறினான்.

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which itself is a department of the University of Cambridge.